TRINITY MIRROR
SUNDAY 26 DECEMBER 2010



# 'Padipathu Inimaiye' book on learning released

Chennai, Dec 26: A book stressing the need of education titled "Padipathu Inimaiye" written by M Vasu, Secretary, Sairam Engineering College was launched in Chennai. Arivoli, Director of Department of Library released the book in the presence of Leo Muthu, Chairman Sairam Engineering college.

"It is an elaborate and extensive book", Arivoli said. Besides, it has vivid information for students about higher studies and about Tamil Nadu universities, deemed universities, leading government and private educational institutes. The author has also stressed the importance of health and yoga in his book.

Educationalist Leo Muthu praised the book's presentation, language and content "Author Vasu has used his experiences extremely well in writing this wonderful book", he added.

"If the way of teaching is teaching is good the learning is interesting This book is useful for teachers, students and parents as well. The book provides vital information to the students to choose educational institutes and course of their liking. " Leo Muthu said.

M.V. Muthuramalingam, Chairman, Velammal Educational Trust, R.S. Munirathnam Chairman RMK Engineering College, V.P. Ramamurthi, Chairman, Dhanalakshmi Engineering College, Prof S. Seetharaman, Prof V. Rajamanickam, Director, Sairam Engineering College. J. Saiprakash, Managing Director, Sairam Engineering College were present at the function.



சாய்ராம் பொறியியல் கல்லூரி செயலாளர் மு. வாசு எழுதிய 'படிப்பது இனிமையே' என்ற புத்தகத்தை சாய்ராம் கல்விக் குழும நிறுவனர் லியோ முத்து வெளியிட்டார். அரசு பொது நூலகத்துறை இயக்குனர் அறிவொளி பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில் வேலம்மாள் கல்விக் குழும நிறுவனர் எம்.வி. முத்துராமலிங்கம், ஆர்.எம்.கே. கல்விக் குழும நிறுவனர் ஆர்.எஸ். முனிரத்னம், தனலட்சுமி பொறியியல் கல்லூரி நிறுவனர் வி.பி. ராமமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சாய்ராம் கல்லூரி செயலாளர் வாசு எழுதிய

# 'படிப்பது இனிமையே!' புத்தக வெளியீட்டு விழாவில் கல்வியாளர்கள் பாராட்டு

### சேர்மன் லியோ முத்து புகழாரம்

**சென்னை,டிச.26-**

**சாய்ராம் பொறியியல் கல்லூரி செயலாளர் வாசு எழுதிய 'படிப்பது இனிமேயே' என்ற புத்தக வெளியீட்டு விழா சென்னை தேவனேய பாவாணர் நூலக கட்டிடத்தில் நடைபெற்றது.**

புகழ்பெற்ற கல்வியாளர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மு.வாசுவின் முயற்சியை பாராட்டினார்கள். இந்த நிகழ்ச்சியில் கலைசெல்வி லியோ முத்து, ஷர்மிளா ராஜா, ரேவதி சாய்பிரகாஷ் ஆகியோர் குத்துவிளக்கேற்றினர்.

சாய்ராம் பொறியியல் கல்லூரி மற்றும் சாய்ராம் கல்வி குழும நிறுவனர் மற்றும் செயலாளர் லியோமுத்து தலைமை ஏற்று நூலை வெளியிட்டார். தமிழக அரசின் பொதுநூலகத்துறை இயக்குனர் க.அறிவொளி நூலை பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார்.

வேலம்மாள் பொறியியல் கல்லூரி மற்றும் வேலம்மாள் கல்வி குழும நிறுவனர் மற்றும் தலைவர் எம்.வி. முத்துராமலிங்கம், ஆர்.என்.கே. பொறியியல் கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் ஆர்.எஸ்.முனிரத்தினம், தன்லட்சுமி பொறியியல் கல்லூரி நிறுவனர் பேராசிரியர் வி.பி.ராம மூர்த்தி, சாய்ராம் பொறியியல் கல்லூரி முன்னாள் முதல்வர் பேராசிரியர் எஸ். சீதாராமன், சாய்ராம் பொறியியல் கல்லூரி மற்றும் கல்வி குழும இயக்குனர் பேராசிரியர் ராஜமாணிக்கம் உள்ளிட்டோர் நூலை பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி பிச்சாண்டி, பக்தர் பதிப்பக உரிமையாளர் காஞ்சனா வாசு, எம்.வி.சிவப்பிரசாத், சரண்யா சிவபிரசாத், எம்.டி.சாய்பிரசாத் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சேர்மன் லியோ முத்து

இந்த நிகழ்ச்சியில் சாய்ராம் கல்வி குழும நிறுவனர் லியோமுத்து பேசும் போது, 'படிப்பது இனிமையே' என்ற புத்தகம் மு.வாசுவின் 5-வது புத்தகமாகும். அவரது முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள். ஏற்கனவே அவர் எழுதிய புத்தகங்கள் 100 புத்தகங்களுக்குள் இருந்தன. ஆனால் தற்போது வெளியிடப்படும் புத்தகம் ஒரு அகராதியில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு உள்ளது.

அவர் தொடர்ந்து புத்தகங்களை வெளியிட வேண்டும். புத்தகம் என்பது காலத்தால் அழியாதது. நிலைத்து நிற்கக் கூடியது. படிப்பு என்பது இனிமை என்று நினைத்தால் இனிமை. கஷ்டம் என்று நினைத்தால் கஷ்டம்.

தேவனேய பாவணர் அரங்கில் தான் வெளியிட வேண்டும் என்று உறுதியுடன் இருந்தார். தற்போது சமச்சீர் கல்வி வந்து விட்டது. எல்லா பாடத் திட்டங்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. அதேபோல் கட்டணங்களும் ஒரே போல் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

## தரமான கல்வி நிறுவனங்கள்

நட்சத்திர ஓட்டலிலும், சாதாரண ஓட்டலிலும் ஒரே மாதிரியான கட்டணம் வசூலிக்கப்படுகிறதா? அதே போல்தான் தரமான கல்வி நிறுவனங்கள் அதிக கட்டணத்தை வசூலிக்க நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சாய்ராம் குரூப் கல்வி நிறுவனங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு அரசு நிர்ணயித்த கட்டணத்தில் சம்பளம் மற்றும் சலுகைகள் வழங்கப்படுகிறது.

## எம்.வி. முத்துராமலிங்கம்

வேலம்மாள் கல்வி குழுமத் தலைவர் எம்.வி. முத்துராமலிங்கம் பேசும்போது, எனக்கு அதிகம் படிக்கும் பழக்கம் கிடையாது. கஞ்சப் பேர்வழி என்றும் கூறுவார்கள். மு. வாசுவை எனக்கு பல ஆண்டுகளாக தெரியும். அவருடைய அனுபவத்தைக் கொண்டு புத்தகம் எழுதி உள்ளார்.

இந்த புத்தகத்தை என்னால் படிக்க முடியவில்லை என்றாலும், எனது கல்விக் குழும நிறுவனங்களில் பணியாற்றும் முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வேன் என்றார்.

## ஆர்.எஸ். முனிரத்னம்

ஆர்.எம்.கே. கல்வி குழும தலைவர் ஆர்.எஸ். முனிரத்னம் பேசும்போது, மு. வாசுவின் முந்தைய இயல்பு வேறு. தற்போதைய இயல்பு வேறு. அவருடைய செயல்பாட்டில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தன்னுடைய அனுபவத்தை சாறாக பிழிந்து மாணவர்களின் நலனுக்காக மிகச் சிறந்த புத்தகத்தை உருவாக்கி உள்ளார்.

ஏராளமான புள்ளி விவரங்கள் அதில் உள்ளன. அதில் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது தற்கொலை தொடர்பான விஷயம் ஆகும். இந்தியா முழுவதும் 2009-ம் ஆண்டில் மட்டும் 16 ஆயிரம் பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அதில் 6 ஆயிரம் பேர் மாணவர்கள் ஆவர். மாணவர்களுக்கு ஏற்படும் மனநிலை தொடர்பாகவும், படிப்புக்கு பின்னர் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாகவும் பல்வேறு விவரங்களை, பயனுள்ள விஷயங்களை 'படிப்பது இனிமையே' என்ற புத்தகத்தில் தொகுத்து கொடுத்துள்ளார். மு. வாசு எனக்கு ஒரு ஆசிரியர் போலவே பல்வேறு கருத்துக்களை கூறி என்னை வழி காட்டி வருகிறார் என்றார்.

புத்தக வெளியீட்டு விழாவையொட்டி மக்கள் குரல், டிரினிட்டி மிரர் ஆசிரியர் ஆர். முத்துக்குமார் எழுத்தாளர் மு. வாசுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

## வாசு ஏற்புரை

புத்தக எழுத்தாளர் மு. வாசு ஏற்புரையும், நன்றியுரையும் வழங்கினார். அப்போது அவர் பேசும்போது, முரட்டுத்தனமாக இருந்த நான் அமைதியானவனாக சாந்த சொரூபியாக மாறியது ஏன் என்பதை விளக்க வேண்டும்.

எனக்கு சில ஆண்டுகளுக்கு முன் இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த போது திடீரென மூச்சு விட முடியவில்லை. அப்போது நான் மரணத்தின் வாயிலை தொட்டு விட்டேன். அவ்வளவு தான் எனது வாழ்க்கை என்ற முடிவுக்கு வந்து விட்டேன். என்னால் சொல்ல முடியவில்லை. கையை மட்டும் தூக்கி அசைத்தேன். அதை புரிந்து கொண்ட நர்ஸ் ஒருவர் ஓடோடி வந்து முதலுதவிகளை செய்து எனக்கு உயிர் வழங்கினார். அவரை என்னால் மறக்க முடியாது.

இந்த சம்பவத்திற்கு பின்னர்தான் வாழ்க்கை என்றால் என்ன என்பதை உணர்ந்து கொண்டேன். அதனால்தான் இரும்பு இதயம் கரும்பானது. நாம் இந்த உலகத்தில் வாழ்ந்ததற்கான அடையாளங்களை விட்டுச் செல்ல வேண்டும். அதற்கு மிகச் சிறந்த வழி புத்தகம் எழுதுவதுதான். இதற்காகவே தினசரி 2 மணி நேரம் செலவழித்து சுமார் 75 மணி நேரத்திற்கு மேல் புத்தகம் எழுதினேன். அதன் பின்னர் புத்தகம் முழு வடிவம் பெற 6 மாதங்களுக்கு மேல் ஆனது. எனது வாழ்நாள் அனுபவங்கள் மாணவர்களுக்கு பதில் அளிக்க வேண்டும். நல்லவழி காட்ட வேண்டும். வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதற்காகத்தான் புத்தகம் எழுதி வருகிறேன். தொடர்ந்து எழுதுவேன்.

எனக்கு தூண்டுகோலாக இருந்தது சேர்மன் லியோ முத்துதான். இதற்கு முன்பு நான் எழுதிய 4 புத்தகங்களையும் அவர் தான் வெளியிட்டார். இனிமேல் வரும் புத்தகங்களையும் அவர்தான் வெளி யிடுவார்.

இவ்வாறு அவர் பேசினார்.